1978 ஏப்ரல் 6]

மலையாள பாடப் புத்தகங்கள்

*823 வினு— திரு. தே. ஞானசிகாமணி : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொழி மைனுரிட்டி மாணவர்களான மலையாள அரிசன மாணவர்களுக்கு மலையாள பாடப்புத்தகங்கள் வழங்கப்படவில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்ததுண்டா ?

(ஆ) அரிசன மலையாள மாணவர்களுக்கு மலையாள பாடப் புத்தகம் வழங்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(ஆ) கேரள அரசினரால் வெளியிடப்பட்ட மலையாள மொழிப் புத்தகங்கள் தமிழ் நாட்டிலுள்ள மலையாள மொழியினைப் பயிற்றுவிக்கும் பள்ளிகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. 1977-78 இல் மலையாள மொழியைப் பயிற்று மொழியாகக் கொண்டு பயிலும் அரிசன மாணவர்களுக்கு புத்தகங்கள் குறித்த காலத்தில் வழங்க இயலவில்லை. எனினும் தேவைப் பட்டியலின் அடிப்படையில் மாணவர்களுக்குப் புத்தகங்கள் கொடுக்கப்பட்டு விட்டன.

திரு. திருச்சி ஆர் சௌந்திரராஜன் : இன்றையதினம் கல்வி கற்கும் மாணவர்களில் பல பேர் திராவிட மொழிகளைத் கற்றுக் கொள்ள ஆசைப்படுகிறார்கள். அப்படிக் கற்றுக் கொள்ள விரும்புகிறவர்களுக்கு எல்லா மொழிகளையும் கற்றுக் கொடுக்கும் வகையில் எல்லா மொழிகளிலும் புத்தகங்களை அச்சடித்துக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ; மூலக் கேள்வி மலையாள மொழியில் பாடங்களைப் பயிலுகிற அரிசன மாணவர்களைப் பற்றியது.

விளவங்கோடு வட்டத்தில் மலையாள மொழி ஆசிரியர்கள்

824 வினு—திரு. தே. ஞானசிகாமணி : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில், விளவங்கோடு தாலுகாவிலுள்ள பாடசாலைகளில் பலவற்றில் மலையாள ஆசிரியர்கள் அமர்த்தப் படாமல் தமிழ் ஆசிரியர்களே மலையாள மாணவர்களுக்கும் பாடம் சொல்லிக் கொடுக்கின்றனர் என்பது அரசின் கவனத்திற்கு வந்ததுண்டா ?

(ஆ) மலையாள ஆசிரியர்களை நியமிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?